# பாதிக்கப்பட்டோருக்கான உதவிகள் சட்ட விதிமுறைகள் (OHG)

**பெண்களுக்கான அவசரதொலைபேசி Winterthur**

**திறந்திருக்கும் நேரங்கள்:**

திங்கள், செவ்வாய், வியாழன் மற்றும் வெள்ளி: 10.00 - 17.00 மணிவரை

புதன்: 13.00 - 17.00 மணிவரை

**எமது சேவைகள்:**

தங்களுக்கு கஷ்டமான சூழ்நிலையில் உதவியும் துணைபுரிதலும்:

- சட்ட, சமூக மற்றும் மனநிலை சம்பந்தமான கேள்விகள்
- தேவையேற்படின் குற்றத்தாக்கல் செய்தல் மற்றும் விசாரணையின் போது உடனிருத்தல்
- மருத்துவர், விசேட நிபுணர் மற்றும் வக்கீல் போன்றவர்களின் தொடர்புகளை ஏற்படுத்துதல்
- தேவையான உதவி நிலையங்கள், அலுவலகங்கள் மற்றும் அரசாங்கநிலையங்களுடன் தொடர்பினை ஏற்படுத்திக் கொடுத்தல்
- பாதிக்கப்பட்டோருக்கான உதவிகிடைப்பதற்கான ஏற்பாட்டில் உடனிருத்தல்

இந்தத் தகவல்கொத்து கணவனால் அல்லது கூடி வாழ்கின்ற காதலனால் (Partner) உடல் ரீதியாக அல்லது உள ரீதியாகப் பாதிக்கப்பட்ட பெண்களுக்குத் தேவையான தகவல்களை வழங்குகின்றது.

## பொதுவான விதிகள்

- பாதிக்கபட்ட பெண்ணாகிய நீங்கள் உங்களுக்குரிய ஆலோசனை நிறுவனத்தை நீங்கள் சுயமாகத் தேர்ந்தெடுக்க முடியும். இவ்வாலோசனை நிறுவனங்களிலிருந்து சட்டரீதியான, சமூகரிதியான மற்றும் உள ரீதியான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள உங்களுக்கு உரிமை இருக்கின்றது. ஆனால் இந்த ஆலோசனை நிறுவனம் உங்கள் மாநிலத்தால் அங்கீகரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.
- இவ்வாலோசனை நிறுவனங்களின் சேவைகள் யாவும் இலவசமானவை. ஆலோசகர்கள் இரகசியத்தைப் பாதுகாப்பார்கள். பாதிக்கப்பட்டோருக்கான உதவிகளுக்கும் குற்றப்பத்திரிகைக்கும் (Strafanzeige) எந்தவிதமான தொடர்புகளும் இல்லை.
- பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களின் பொருளாதாரத்தைப்பொறுத்து தேவைப்படும் மூன்றாவது உதவிகளுக்குக்குரிய பணத்தைக் கட்ட முடியும். ( உதாரணமாக சிகிச்சைகள், அவசர வதிவிடம் போன்றவை)
- தேவைக்கேற்ப நீங்கள் பாதிக்கப்பட்டதினத்திலிருந்து 5 வருடங்களுக்குள் பாதிக்கப்பட்டவருக்கான நஷ்ட ஈட்டினையும் (உதாரணமாக: வேலை இழப்பு) மற்றும் பாதிக்கப்பட்டோருக்கான உதவித்தொகை போன்றவற்றையும் கோரமுடியும். இது 1.1.2007 இற்குப் பின்பு நடந்த குற்றங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

**துன்புறுத்தியவருக்கெதிராக குற்றவியல் நடவடிக்கை எடுக்கும் போது உங்களுக்குள்ள சட்ட உரிமைகள்:**

- போலீஸ் அல்லது நீதிபதி விசாரணையின்போது நீங்கள் உங்களுடன் ஓர் நம்பிக்கைக்குரிய நபரை அழைத்துச் செல்ல முடியும்.
- குற்றவாளியின் முன்னிலையில் இல்லாமல் பிரத்தியேகமாக உங்களுக்குரிய விசாரணையை நடாத்தும்படி நீங்கள் கோரமுடியும்.
- நீதிபதியின் முக்கியமான விசாரணை முடிவுகள் பற்றி அறிந்து கொள்ளமுடியும். உதாரணமாக குற்றவாளி ஜெயிலிலிருந்து விடுவிக்கப்பட்டாரா போன்ற விடயங்களை நீங்கள்அறிந்து கொள்ளமுடியும்.

**நீங்கள் பாலியல் ரீதியான தாக்கத்திற்குள்ளாகியிருந்தால் உங்களுக்கு மேலதிகமாக உள்ள சட்ட உரிமைகள்:**

- நீதிமன்ற விசாரணையில் ஓர் பெண்அதிகாரி மூலம் நடைபெறவேண்டும் என நீங்கள் கேட்க அனுமதியுண்டு.
- வழக்கு சுமுகமாக நடைபெற, பெண் மொழிபெயர்ப்பாளர்தான் வரவேண்டும் என்றும் கோரலாம்.
- நீதிமன்றத்தில் நீங்கள் பங்குகொள்ளவிருக்கும் விசாரணையின்போது குற்றவாளி கலந்துகொள்ளாமல் இருக்கவேண்டுமென நீங்கள் விண்ணப்பிக்கலாம்.
- உங்கள் பாலுறுப்புக்கள் சம்பந்தமாக கேள்விகள் கேட்கப்பட்டால் அதற்குரிய பதிலை நீங்கள் சொல்லாமல் இருக்க உங்களுக்கு உரிமையுண்டு.
- நீதிமன்ற விசாரணை சம்பந்தமான விடயங்கள் ஏனையோருக்குத் (பொதுமக்களுக்கு) தெரியாமலிருக்கும்படி இரகசியமான முறையில் நடாத்தும்படி கேட்கமுடியும்.